DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 117 / 2024 |
| Deposition of witness | : | PW–1 |
| List of witness | : | LW–1 |
| Name | : | நடராஜன் |
| Father's /Husband Name | : | முத்துக்கண்ணன் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 94 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day February 2026.
Accused absent. U/s 355 petition filed and allowed.

**முதல் விசாரணை:–**

(சாட்சிக்கு காதுகேட்கும் திறன் குறைவாக இருந்தது.) நான் நன்னிலம் தாலுக்கா முடிகொண்டானில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி நமச்சிவாயம் எனது ஊரைச்சேர்ந்தவர். எனது கொல்லையில் இருந்த மாங்காமரத்திலிருந்து மாங்காவை யாரோ பறித்தார். அதனால் நான் பொதுவாக மாங்காவை பறித்தவர்களை திட்டினேன். அந்த சமயத்தில் ஆஜர் எதிரி அங்கிருந்தார். அதனால் எதிரி நமச்சிவாயம் என் மீது ஆடு திருடியதாக நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதனால் நான் எதிரி வீட்டிற்கு சென்று அது குறித்து கேட்டேன். அப்போது அதில் எதிரி அருவாள் எடுத்துக்கொண்டு வந்து அவர் கையில் வைத்து இருந்த அரிவாளால் எனது இடது பக்க முகத்தில் குத்தி விட்டார். அதனால் எனக்கு வாயில் காயம் ஏற்பட்டது. உடனே என் மனைவி பத்மா என்னை 108 ஆம்புலன்சிலின் மூலம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்கைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டு பின்பு மேல் சிகிச்கைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்கைக்கு சென்றோம். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை

விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆடு மேய்ப்பது தான் எனது தொழில் என்றால் சரியல்ல. கறிக்கடை காரருக்கு நான் தான் கறி அளிப்பேன் என்றால் சரியல்ல. வழக்கமாக நான் கறிகொடுக்கும் கறிகடை காரருக்கு கொடுக்க கறி இல்லாததால் எதிரியின் ஆட்டை திருடிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று எதிரியை நான் தான் அசிங்கமாக திட்டினேன் என்றால் சரியல்ல, அவர் தான் என்னை அசிங்கமாக திட்டினார். எதிரியின் ஆட்டை திருடிவிட்டு நான் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது ஆடு திருடியதாக எதிரி புகார் அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் அது மாங்காய் பிரச்சனை காரணமாக இருந்த பகையினால் எதிரி பொய்யாக புகார் அளித்து வழக்கு பதிவு செய்துவிட்டார். மாங்காய் திருடியது யார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் புகார் அளித்தபிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனது வீட்டிற்கே வந்து விசாரித்தார்கள். நான் கொடுத்த புகாரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் பொய் புகார் அளித்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

**– இல்லை –**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 117 / 2024 |
| Deposition of witness | : | PW-2 |
| List of witness | : | LW-2 |
| Name | : | பத்மா |
| Father's /Husband Name | : | நடராஜன் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 81 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day February 2026.
Accused absent. U/s 355 petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் நன்னிலம் தாலுக்கா முடிகொண்டானில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 நடராஜன் எனது கணவர் ஆவார். எதிரி நமச்சிவாயம் எனது ஊரைச்சேர்ந்தவர். எங்களது கொல்லையில் இருந்த மாங்காமரத்திலிருந்து மாங்காவை நமச்சிவாயம் என்பவரின் மகன் கோகுல் என்பவர் வழக்கமாக மாங்காயை பறித்தது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது. அது தொடர்பாக எனது கணவர் பொதுவாக கேட்டார். அதற்கு எதிரி கடந்த 17.05.2024-ம் தேதி மதியம் 02.00 மணியளவில் எனது கணவர் எதிரி வீட்டிற்கு சென்று கேட்டபோது எனது கணவரை எதிரி குச்சிகாரி மவனே, தேவடியா கனே என்று திட்டினார். அவ்வாறு திட்டியதால் எனக்கு அறுவருப்பாக இருந்தது. அவ்வாறு திட்டிவிட்டு எதிரி அருவாளை கொண்டுவந்து அதன் கைப்பிடியால் எனது கணவரை வாய் அருகே பலமாக தாக்கி காயத்தை ஏற்படுத்தினார். அவ்வாறு, தாக்கிவிட்டு எனது கணவரை வெட்டி கொன்றுவிடுவதாக மிரட்டினார். அவ்வாறு, எதிரி எங்களை மிரட்டியதால் பயம் ஏற்பட்டு எங்களுக்க மயக்கமே வந்துவிட்டது. பின்னர் காயம் பட்ட எனது கணவரை 108 ஆம்புலன்சிலின் மூலம் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்கைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டு பின்பு மேல் சிகிச்கைக்காக திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்கைக்கு சென்றோம். நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னிடம் விசாரணை

செய்து வாக்குமூலம் வாங்கினார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். கறிக்கடை காரருக்கு நான் தான் கறி அளிப்பேன் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் கறிக்கடை காரருடன் சுமூக உறவுமுறையில் இருந்தோம் என்றாலும், எங்களுக்குள் பிரச்சனை இல்லை என்றாலும் சரிதான். கறிக்கடை காரர் எங்களிடம் ஆடு திருடியதாக ஏன் கேட்டார் என்றால் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை. மாங்காய் திருடிய எதிரியின் மகன் மீது ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் அவன் சிறுவன் என்பதாலும் வீட்டில் சொன்னால் கண்டிப்பார்கள் என்பதால் போலிசில் புகார் அளிக்கவில்லை. நானும், எனது கணவர் அ.சா.1–ம் எதிரியின் வீட்டிற்கு கேட்க சென்றோம் என்றால் சரிதான். அவ்வாறு சென்ற பிறகு நானும் எனது கணவர் அ.சா.1–ம் தான் எதிரியை அசிங்கமாக பேசினோம் என்றால் சரியல்ல, எதிரி தான் எங்களை அசிங்கமாக பேசினார். எதிரி எனது கணவர் மீது ஆடு திருடியதாக ஏன் வழக்கு கொடுத்தார் என்றால் எனது கணவர் எதிரி அடித்ததால் பலமாக காயம் ஏற்பட்டு மருத்துவமனை சென்றதாலும் அவர் இறந்துவிடுவார் என்ற பயத்தில் எதிரி ஆடு திருடியதாக என் கணவர் மீது பொய்யாக புகார் அளித்தார். எனது கணவர் அ.சா.1–க்கு ஏற்பட்ட காயங்கள் அவரே அவருக்கு சுயமாக ஏற்படுத்திக்கொண்ட காயங்கள் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

– இல்லை –

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 117 / 2024 |
| Deposition of witness | : | PW-3 |
| List of witness | : | LW-4 |
| Name | : | ராகுல் |
| Father's /Husband Name | : | கணேசன் |
| Village | : | முடிகொண்டான் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 26 |
| Occupation | : | தனியார் நிறுவன ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day February 2026.
Accused absent. U/s 355 petition filed and allowed.

**முதல் விசாரணை:-**

நான் நன்னிலம் தாலுக்கா முடிகொண்டானில் வசித்து தனியார் நிறுவன ஊழியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 நடராஜன் மற்றும் அ.சா.2 பத்மா எதிரி நமச்சிவானம் எனது ஊரைச்சேர்ந்தவர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அ.சா.1 க்கும், எதிரி நமச்சிவாயத்திற்கும் இடையே நடந்த பிரச்சனை குறித்து சம்பவம் நடந்த மறுநாள் மதியம் 02.00 மணிக்கு நன்னிலம் போலிசார் எதிரி நமச்சிவாயம் வீட்டிற்கு எதிரே விசாரணை செய்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த வசந்த் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல, சம்பவ இடத்தில் வைத்து தான் வாங்கினார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது உறவினர்கள் என்றால் சரியல்ல, எனது தெருவில் வசிப்பவர்கள். சம்பவம் பற்றி எனக்கு எதுவும்

தெரியாது என்றாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது தெருக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**– இல்லை –**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.